1969 மார்ச் 21]

திரு. ஏ. சி. நரசிம்மன் : பல கூட்டுறவு நிறுவனங்கள் தாங்களாகவே நியமனம் செய்து கொள்கிறார்கள். அவர்கள் எம்ளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலம் விண்ணப்பங்களை வரவழைத்து நியமனங்கள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது பற்றிய தகவல் இல்லை.

சுந்தரராஜபுரம் அருகிலுள்ள குறுகிய பாலம்

* 407 வின.— திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் வட்டம், சுந்தரராஜபுரத்திற்கு அண்மையில் உள்ள பெரியாற்றுக் கால்வாயில் கட்டப்பட்டுள்ள மிகக் குறுகிய பாலத்தை விரிவாக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை தொடங்கப்பெறும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) சுந்தரராஜபுரத்திற்கு அருகில் பெரியார் கால வாயில் கட்டப்பட்டுள்ள குறுகிய பாலத்தை மேம்படுத்துவதற்காகவும் அகலப்படுத்துவதற்காகவும் ரூபாய் 8,000 செலவில் மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(இ) அவ்வேலை நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது.

Retired Supervising staff of Public Works Department

* 408 Q.—Dr. H. V. Hande : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Hon. the Chief Minister has received any petition signed by a couple of retired Supervising staff of State Public Works Department on 31st May 1968 requesting him to reconsider their demand of liberalised pension scheme and other retirement benefits; and

(*b*) if so, the action taken by the Government so far?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) ஆம். அம்மனுசார்புள்ள தலைமைப் பொறியாளர்களுக்கு அனுப்பப்பட்டது. எனெனில் மேற்சொன்ன மனுவைச் சேர்ந்த மேற்பார்வையாளர்கள் பொறியியல் பட்டறையில் வேலை ரீதியில் ஊதியம் பெறுபவர்களாக இருந்தமையால் அவர்கள் ஓய்வு கால ஊதியமில்லாத ஊழியர்களாகக் கருதப்பட்டு, 1960-ம் ஆண்டின் தமிழ்நாட்டுத் தாராள ஓய்வு கால விதிகள் அவர்கட்குப் பொருந்தாது என்பதை அரசு ஏற்கனவே தலைமைப் பொறியாளருக்கு அறிவித்துள்ளது.

Dr. H. V. Hande : Is it a fact that after that, the Chief Engineer wrote a letter to Government? While the G.O. on the liberalised pension scheme is applicable to the C.P.W.D. staff of the same category, why is it not made applicable to the P.W.D. staff, taking into consideration the recommendations contained in Chief Engnieer's letter No. C.E. 1/76/379, dated 5th March 1962?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ; அதுபற்றிய விவரம் தற்போது என்னிடமில்லை.